DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.54/2022**

Deposition of witness for Prosecution அ.சா.4

Name : ராஜேஸ்வரி
Father/ Husband Name : மாணிக்கவாசகன்
Village :
Taluk :
Calling :
Age :

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 02.07.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தேவகோட்டையில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 மற்றும் எதிரியை தெரியும். கடந்த 07.12.2020-ம் தேதி காலை 10.00 மணியளவில் என் வீட்டு முன்னால் வெளியே நின்று பேசிக் கொண்டிருந்தேன். அ.சா1 க்கும் எதிரிக்கும் என் வீட்டிற்கு பக்கத்து வீடு தான். நான் அவ்வாறு வெளியே நின்றுகொண்டு இருக்கும்போது வெளியே சண்டை ஏற்பட்டது. அப்போது நான் கவிதா, அமுதவள்ளி பேசிக் கொண்டுஇருந்தோம். முதலில் அ.சா.1வும் எதிரியும் வாய்ச்சண்டை போட்டுக் கொண்டார்கள், பின்பு பக்கத்தில் இருந்த சிலாப்பை எடுத்து எதிரி அ.சா.1யை அடித்துவிட்டார்.

2. அ.சா.1 அடிபட்டு வீட்டுக்குள் போக முயன்றபோது எதிரியும் அவரது மகளும் சேர்ந்து அ.சா.1 யை தலை முடியை பிடித்து இழுத்து ரோட்டில் கொண்டு வந்து போட்டார்கள். பின்னர் எதிரியின் மகள் ஆரோக்கிய ரெக்ஸி செருப்பால் அ.சா1 யை அடித்தார். அ.சா.1க்கு எதிரியுடன் நடந்த சண்டையில் அவர் சாக்கடைக்குள் விழுந்துவிட்டார். அதனாலும் கல் எறியப்பட்டதாலும் அவருக்கு காலில் வெட்டுக்காயமும் முழங்கை மற்றும் முட்டில் இரத்தக்காயமும் ஏற்பட்டது. பிறகு நான் அ.சா.1யை என் இருசக்கர

வாகனத்தில் தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. அ.சா1 எனக்கு உறவினர் இல்லை ஆனால் ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர். நான் அ.சா.1, கவிதா ஆகியோர் எதிரியுடன் பேசிக் கொள்ளமாட்டோம் என்றால் அ.சா.1வும், கவிதாவும் எதிரியுடன் பேசுவார்கள், நான் சம்பவத்திற்கு முன்பு பேசிக் கொண்டு இருந்தேன். சம்பவத்திற்கு பின்பு பேசுவதில்லை. நிர்மலாவிற்கும் எதிரிக்கும் எதிரி குடியிருக்கும் வீட்டை காலி செய்வது சம்பந்தமாக ஏற்கனவே பிரச்சனை இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. அ.சா.1க்கும் எதிரிக்கும் எதற்காக சண்டை ஏற்பட்டது என்றால் அ.சா.1னின் வீட்டில் கிளிக்கு வைத்த உணவை வெளியில் கொட்டப்போனபோது எதிரி அவருடைய வீட்டுவாசல் அருகில் கொட்டுவதாக சொல்லி பிரச்சனை செய்தார். நான் சம்பவ நடந்த போது எங்கு இருந்தேன் என்றால் வீட்டிற்கு வெளியே ரோட்டில் பேசிக் கொண்டிருந்தேன்.

3. போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். போலீசார் என்னை விசாரித்தபோது நேரம் சுமார் 11.00 மணி இருக்கும். நாங்கள் மருத்துவமனைக்கு செல்லும்பொழுது நேரம் சுமார் 10.30-10.45 மணி இருக்கும். நாங்கள் மருத்துவமனைக்கு சென்ற உடனே போலீசார் வந்துவிட்டார்கள் என்றால் ஆமாம். அ.சா.1யை சிகிச்சைக்கு முன்பே போலீசார் விசாரித்துவிட்டார்களா என்றால் ஆமாம்.

4. மருத்துவமனையில் விசாரித்த பிறகு மீண்டும் போலீசார் விசாரித்தார்களா என்றால் இல்லை. புகாரை போலீசார் எழுதிக் கொண்டார்களா என்றால் இல்லை, நான் கையால் எழுதினேன். புகாருக்கு விவரம் யார் சொன்னது என்றால் எனக்கு தெரிந்ததை எழுதிக் கொடுத்தேன். அ.சா.1க்கு உடம்பில் எத்தனை இடத்தில் காயம் ஏற்பட்டது என்றால் நான் காயங்களை எண்ணவில்லை.

5. நான் சொன்னது போல் எந்தவிதமான சம்பவமும் நடைபெறவில்லை என்றும் நான் அ.சா.1 மற்றும் கவிதா மூவரும் எதிரியின் வீட்டிற்கு முன்பு குப்பையை கொட்டியதால் ஏற்பட்ட முன்விரோதத்தால் மூவரும் கூட்டு சேர்ந்து பொய்யான புகாரை அளித்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியல்ல. நான் அ.சா.1 மற்றும் கவிதா மூவரும் எதிரியுடன் சம்பவத்திற்கு முன்பும் பேசுவதில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.